**O.S.No. 5/2016**

வா.சா.2, திரு. பூமிநாதன்
நாள் : 20.08.2024 நேரம் : 12.16 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)எனது மதினி பிச்சையம்மாளுக்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதும் வந்துள்ளதா என்றால் இல்லை. பிச்சையம்மாள் அழைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன். தாவா சொத்து வாதியின் தகப்பனார் கிரயம் பெற்ற நாள் முதல் அனுபவத்தில் இருப்பதற்கு எவ்வித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் பெயரிலோ, வாதியின் தகப்பனார் பெயரிலோ பட்டா ஏதும் உள்ளதா என்றால் எனது தந்தை கிரயம் வாங்கிய விவரம் தான் தெரியும். நானும், எனது சகோதரரான இறந்துபோன 1ம் வாதியும் பாகம் பிரித்து கொண்டதற்கு ஏதும் ஆவணம் உள்ளதா என்றால் நாங்கள் வாய்மொழியாகத்தான் பெரியோர்கள் முன்னிலையில் பாகம் பிரித்துக்கொண்டோம்.

2) தாவா சொத்து குறித்து வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி ராஜேஸ்வரி 1ம் பிரதிவாதி குருந்தையாவுக்கு தாவா சொத்தை கிரயம் பெற்று இன்று வரை 1ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1954 முதல் 1968 வரை எவ்வித கிரயமும் பதிவாகவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருப்பதை தெரிந்து கொண்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.29 P.M

சாட்சியின் கையொப்பம்.